மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் படிக்கக்கூடிய ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் 1,354 விடுதிகள் இருக்கின்றன. அதில், 1,264 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இப்போது 34 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மீதமுள்ள புதிய விடுதிகளைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பார்த்தால், இந்த ஆண்டு பட்ஜெட்டில் அரக்கோணம் இடம்பெறவில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, இதுசம்பந்தமான முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

255—

மின் இணைப்பு

***1942—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 மே 10]

உளுந்தூர்பேட்டை தொகுதியில் அரசு புறம்போக்கு இடத்தில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பல மாநிலங்களில் மின்வெட்டு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், அவர்களின் சீரிய வழிகாட்டுதலால், ஏப்ரல் மாதத்தில் 30 நாட்களில் 17 நாட்களும், மே மாதம் 9 நாட்களில் 6 நாட்களும் 16,000 மெகா வாட்டுக்குமேல் உச்சபட்ச மின் தேவையை எந்தவிதத் தடையுமில்லாமல் தமிழ்நாடு மின்சார வாரியம் பூர்த்தி செய்துள்ளது. மேலும், கூடுதல் மின்சாரம், மே மாதம் 1 ஆம் தேதி மற்றும் 8 ஆம் தேதி ஆகிய 2 நாட்களில் 5 இலட்சத்து 94 ஆயிரம் யூனிட் மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு 12 ரூபாய் என்ற விலையில் exchange *மூலமாக விற்பனை செய்யப்பட்டு, தமிழகத்தில் எந்தவித மின் தடையும் இல்லாமல் சீரான மின் விநியோகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், அரசு புறம்போக்கு இடத்திலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்க தடையில்லா சான்றிதழ் அளிக்கும்பட்சத்தில், மின்சார இணைப்பு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதன்கீழ் எனது உளுந்தூர்பேட்டை தொகுதியில் ஒரு இலட்சமாவது இணைப்பை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2022 மே 10

ஏழையெளிய மக்களுக்கெல்லாம் வீடு கட்டியிருக்கக்கூடிய புறம்போக்கு இடத்தில் மின் இணைப்பு கோரி மனு கொடுக்கப்பட்டதில், மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. அதை முறைப்படுத்தி வழங்குவதற்கும், அதேபோல, கிராமப்புறங்களில் ஏரிக்கரையிலும், குளக்கரையிலும் உள்ள கோயில்களுக்கெல்லாம் மின் இணைப்பு கேட்டு மனு கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் மின் இணைப்பு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இப்போது காலையில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தால் மாலையே கொடுத்துவிடுகிறார்களே! Application காலையில் கொடுத்தால் மாலையில் மின் இணைப்பு கிடைக்கிறதே!

திரு. A.J. மணிக்கண்ணன்: இதனை அரசு புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியிருப்பவர்களுக்காகக் கேட்கிறேன். பின்னல்வாடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கான இடத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்து கொடுத்திருக்கிறார்கள். சீரான மின்சாரம் கிடைப்பதற்காக அந்தத் துணை மின் நிலையத்தை விரைவில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி இந்த ஆண்டு அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், அரசு புறம்போக்கு நிலத்தில் வீடுகள் கட்டியவர்களுக்கு அரசினுடைய தடையில்லாச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கக்கூடியபட்சத்தில்தான் மின்னிணைப்புகள் வழங்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தடையில்லாச் சான்றிதழைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 மே 10]

அதேபோன்று, அவருடைய தொகுதியில் எந்தெந்த இடங்களில் இதுபோன்ற மின்னிணைப்புகள் இல்லாமல் இருக்கின்றன என்பதையும் கடிதம்மூலம் வழங்கினால் துறைவாரியாக மீண்டும் அதை ஆய்வு செய்து, வருவாய்த் துறையோடு இணைந்து, தடையில்லாச் சான்றிதழைப் பெற்று, மின்னிணைப்புகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, சேலம் மாவட்டத்திற்குக் கடைசித் தொகுதியாகும். அதோடுகூட விவசாயம் நிறைந்த தொகுதி. தலைவாசல் தாலுகா முழுமைக்கும், தலைவாசலில் உள்ள 110/22 KV துணை மின் நிலையத்திலிருந்துதான் மின் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே, மின் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்தித் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியிலுள்ள மின்னிணைப்புகளைக் கணக்கிலே கொண்டு ஆய்வு செய்து, தேவை ஏற்படின், முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப்பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலங்களிலே உள்ள வீடுகளுக்கு தடையில்லாச் சான்றிதழ் இருந்தால் மின்னிணைப்பு வழங்க முடியுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே சொன்னார்கள். ஆனால், வருவாய்த் துறையிலே தடையில்லாச் சான்றிதழ் கிடைப்பதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. கடந்த காலங்களிலே 20 ரூபாய் பத்திரத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மின்னிணைப்பைத் துண்டித்துக்கொள்ளலாம் என்று அந்தந்த வீட்டு உரிமையாளர்களிடம் கடிதம் பெற்று, மின்னிணைப்பு கொடுத்திருக்கின்றார்கள். அந்த முறையை மாற்றி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Indemnity bond.

திரு. க. சுந்தர்: *ஆமாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது 100 ரூபாய் பத்திரம்.*

திரு. க. சுந்தர்: *அந்த வகையிலே மின்னிணைப்பைத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நியாயமான கேள்விதான். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கேள்விதான். இருந்தாலும் நீதிமன்றத்திற்குச் செல்கின்றபோது, அரசு நீர்நிலைப் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு அதுபோன்ற நிலைகளை ஏற்படுத்தப்படக்கூடிய முறையில் சட்டச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த இடங்களில் அவர்களது தொகுதியில் அதுபோன்று மின்னிணைப்புகள் இல்லாமல் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவை எந்த வகைப்பாட்டில் உள்ளன என்பதை அறிந்து, அதற்கேற்றவாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப்பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

2022 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சியில் வலியஏலா பகுதியில் ஏற்கெனவே 75 வீடுகளுக்கு மின்னிணைப்பு தந்த சூழ்நிலையில், தொடர்ந்து கிட்டத்தட்ட 125 வீடுகள் இன்னும் மின்னிணைப்பு இல்லாமல் இருக்கின்றன. அவர்களுக்கு அந்த மின்னிணைப்பை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மார்த்தாண்டம் பகுதியில் 230/110 KV sub-station; *அதேபோன்று, அருமனை, களியல், இடைக்கோடு, முக்கூட்டுக்கல், அதங்கோடு பகுதிகளில் 110/11* KV sub-station *அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு இடைக்கோடு பகுதியில் புதிய 110/11* KV *துணை மின் நிலையம் அமைப்பதற்கான உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அதேபோன்று, புதிய மின்னிணைப்புகள் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். எந்தப் பகுதி என்று எழுதிக் கொடுத்தால், கண்டிப்பாக, காலை விண்ணப்பித்தால் 24 மணி நேரத்தில் வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். தடையில்லாச் சான்று வழங்குகின்றபட்சத்தில், அதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தடையில்லாச் சான்றைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால், மின்னிணைப்பு வழங்க முடியுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2022 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

முற்பகல் 10-35

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இளைஞரணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன். புறம்போக்கு இடங்களில் குடியிருக்கின்ற மக்களுடைய வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படுகின்றபோது, பட்டா இருக்கின்ற வீடுகளுக்கு மட்டும்தான் மின்னிணைப்பு வழங்கப்படுகிறது. சுமார் 10 ஆண்டுக் காலமாக இந்தத் தடை இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1999 ஆம் ஆண்டு One Time Scheme என்கின்ற Scheme-ஐப் போட்டு, பாட்டை புறம்போக்கு, தரிசு புறம்போக்கு, கல்வெட்டுக் குழி புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு என்பன போன்ற புறம்போக்கு நிலங்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கப்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் சொன்னதனால், நீர்நிலைப் புறம்போக்கிற்குப் பட்டா கொடுப்பதில்லை. நீர்நிலைப் புறம்போக்கைத் தவிர, மீதியிருக்கின்ற, நான் சொன்ன அந்தப் புறம்போக்கு இடங்களில் இருக்கின்ற மக்களுக்கு, பத்தாண்டு காலமாக அந்த ஆட்சியில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, இனிவருகின்ற காலங்களில், அங்கே குடியிருக்கின்ற மக்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையும், வருவாய்த் துறையும் இணைந்து, இதுபோன்ற இனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, உரிய வழிமுறைகள் வகுக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலையும் உத்தரவையும் பெற்று, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு

2022 மே 10]
பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, NOC பெறுவதிலே பல தடைகள் இருக்கின்றன. அதே கேள்வியைத்தான் நானும் கேட்க வேண்டும் என்றிருந்தேன். Indemnity bond கொடுத்தால் சிறிது easy ஆக இருக்கும். அதை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரையின்பேரில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளாக இருக்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விவசாயம் செய்வதற்கான மின்னிணைப்பு கேட்டால், உடனடியாக வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பு, தற்போது மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சியில் இருக்கிறதா? ஏற்கெனவே ஒரு மின்னிணைப்பு வழங்கினார்;இப்போது மாண்புமிகு தளபதி ஆட்சியில் விவசாயிகளாக இருக்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இரண்டு மின்னிணைப்புகள் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.* (குறுக்கீடு) நானும் ஒரு *விவசாயி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓர் இலவச மின்னிணைப்பு என்பது தற்போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடைமுறையில் உள்ளது. மின்னிணைப்பு பெறாத சட்டமன்ற உறுப்பினர்கள், ஓர் இலவச மின்னிணைப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்*

வழிகாட்டுதலின்படி பெறலாம். கூடுதல் மின்னிணைப்பு என்பது இல்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஓர் இலவச மின்னிணைப்பு பெறுவது நடைமுறையில் உள்ளது. எனவே, அதைப் பெறாத சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த மின்னிணைப்பை வழங்க வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில் உள்ள சொக்கநாதன்புத்தூர் ஊராட்சி மற்றும் மேலூர் துரைசாமிபுரம் ஊராட்சி பகுதிகளுக்கு சேத்தூர் துணை மின்நிலையத்திலிருந்து current செல்கிறது. ஆனால், அங்கு தென்னை மரம் விழுவதினால் மின்தடை ஏற்பட்டு சொக்கநாதன்புத்தூர் மற்றும் மேலூர் துரைசாமிபுரத்தில் உள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நேற்றுகூட, அதுபோன்று மரம் விழுந்து current தடைபட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக, பள்ளி மாணவர்கள் என்னிடம் பேசினார்கள். தென்காசி மாவட்டம், சிவகிரியின் அருகில் துணை மின் நிலையம் இருக்கிறது. தயவுசெய்து, அங்கேயிருந்து current கொடுத்தீர்களென்றால், சொக்கநாதன்புத்தூரிலும், மேலூர் துரைசாமிபுரத்திலும் மின்தடை பிரச்சினையில்லாமல் இருக்கும் என்பதால், அதைக் கொடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்களிலிருந்து மாற்றி அந்த மின் விநியோகத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதுசம்பந்தமாக துறைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இரண்டொரு நாட்களில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மலைகள் சார்ந்த தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஜார்தான்கொல்லை, பீஞ்சமந்தை, பாலாமொட்டு ஆகிய மலைக் கிராமங்கள் 20,000 மக்கள்தொகை கொண்ட கிராமங்களாகும். அந்த மலைக் கிராமங்களில், மழை பொழிகின்றபோது, காற்று வீசுகின்றபோது, மின் கம்பங்கள் சாய்ந்துவிடுகின்றன. அப்படி அவை சாய்ந்துவிடுகின்ற நேரத்தில், அங்கே மின் தடை ஏற்பட்டு, மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே, அங்கே ஒரு 110 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால் அந்த மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை அதைக் கேட்கின்றபோது, இரண்டு ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது, அங்கே இரண்டு ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. அதைத் தருவதற்கு மாவட்ட நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அதைப் பெற்று தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்டத்தில் ஐந்து புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தேவை ஏற்படின், முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

256—

ஜவுளிப் பூங்கா

***1635—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் மற்றும் பணப்பாக்கத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோளிங்கர் மற்றும் பணப்பாக்கத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி, நெசவாளர்கள் நிறைந்த தொகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற நிகழ்ச்சி பணப்பாக்கத்தில் நடந்தபோது அப்பகுதி மக்கள் எல்லோரும் ஜவுளிப் பூங்கா அமைப்பதன் அவசியம் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனு அளித்துள்ளனர். எனவே, நெசவாளர்கள் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, விரைவில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.